16.12.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## கொய்மலர் மையத்தில் இஸ்ரேல் அதிகாரிகள் ஆய்வு

ஓசூர்: ஓசூர் அடுத்த தளி கொய்மலர் மகத்துவ மைய பசுமை குடில்களை, இஸ்ரேல் நாட்டு அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஓசூர் அடுத்த தளியில், இந்திய, இஸ்ரேல் கூட்டமைப்பில் ஆரம்பிக்கப் பட்டுள்ள கொய்மலர் மகத்துவ மையத்தில், கொய்மலர் சொட்டு நீர் பாசனம் மற்றும் பசுமை குடில் குறித்த கருத்தரங்கம் நடந்தது. கலெக்டர் ராஜேஸ் பங்கேற்றார். இஸ்ரேல் வேளாண்மை அறிவியியல் ஆலோசகர் டான் ஆலுப், வேளாண்மையில் சொட்டு நீர் பாசனம் அமைத்தல் குறித்தும், மலர் ஏற்றுமதியாளர் எலிசா ஸ்பிகல், கொய்மலர் சாகுபடி குறித்தும், பசுமை குடில் தொழில்நுட்ப வல்லுனர் இட்சிக் எஸ்கொய்ரா, பசுமை குடில் அமைப்பது குறித்தும், விரிவாக எடுத்துக் கூறினர். கருத்தரங்கில், இஸ்ரேல் நாட்டு தூதர் டவ் செகெவ் ஸ்டெயின் பர்க் பேசியதாவது: இந்திய, இஸ்ரேல் உறவு என்பது, இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவு மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள விவசாயிகள் இடையே உள்ள உறவாக இருக்க வேண்டும். இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்பம் அனைத்து விவசாயிகளுக்கும் சென்று சேர வேண்டும்.

இஸ்ரேல் தொழில் நுட்பங்களை அனைத்து மக்களும் பயன்படுத்தி பயன் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மேற்குவங்கம், குஜராத், ஹரியானா, பஞ்சாப், மிசோரம் மற்றும் கேரளா உள்ளிட்ட, பத்து மாநிலங்களைச் சேர்ந்த, 16 உயர் அதிகாரிகள் கருத்தரங்கில் பங்கேற்றனர். முன்னதாக இஸ்ரேல்

தூதர் டவ் செகெவ் ஸ்டெயின் பர்க் தலைமையில், பசுமை குடில் பணிகளை இஸ்ரேல் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஓசூர் சப் கலெக்டர் டாக்டர் செந்தில்ராஜ், தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர்கள் ராஜேந்திரன், மணி உட்பட பலர் உடனிருந்தனர்.

**தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.45 லட்சம் நிவாரணம்**

வாலாஜாபாத் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு, 45.05 லட்சம் ரூபாய் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், நவம்பர் மாதம் துவங்கிய வட கிழக்குப் பருவ மழையால், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் நீரில் மூழ்கின. அவற்றிற்கு நிவாரணம் வழங்க, முதல் கட்டமாக, வேளாண் துறைக்கு 30,208 ஏக்கருக்கு, 16.48 கோடி ரூபாய் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோல், தோட்டக்கலை துறையில் பாதிக்கப்பட்ட 820 ஏக்கருக்கு, 45.05 லட்சம் ரூபாய் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, தோட்டக்கலை துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், 'மழையால் பாதிக்கப்பட்ட காய், கனி பயிர்களுக்கு, 1 ஏக்கருக்கு, 5,465 ரூபாயும்; நீண்டகால பயிர்களுக்கு, 1 ஏக்கருக்கு, 7,287 ரூபாயும் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்'என்றார்.

**18ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 18ம் தேதி நடக்கிறது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 18ம் தேதி, பகல் 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர்

அலுவலக கூட்ட அரங்கில் நடக்க உள்ளது. ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் டிச., 18 காலை 11:30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இந்த கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்கலாம் என, கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

**சிங்கம்புணரி வட்டாரத்தில் உளுந்து சாகுபடி மானியம்**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி வட்டாரத்தில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மானியம் வழங்குகிறது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2015-16 ல், 166.50 எக்டேர் உளுந்து சாகுபடி இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது 15 வருடங்களுக்கு மிகாத வம்பன் ரகங்கள் 3,4,5,6,7.கோ 6,7 உளுந்து விதைத்துள்ள விவசாயிக்கு செயல் விளக்க திடல் மானியம் எக்டேருக்கு ரூ 2 ஆயிரத்து 200 ம் விதையில்லா மானியம் நூறு சதவீதம்,பயறு நுண்ணூட்டம் 5 கிலோ,பூஞ்சான உயிர்கொல்லி 2 ஆயிரத்து 500 கிலோ,திரவு வடிவிலான உயிர் உரங்கள்

1 லிட்டர் முழு மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் வங்கி கணக்கில் ரூ ஆயிரத்து 94 ரொக்க மானியம் வரவு வைக்கப்படும். சிங்கம் புணரியில் உள்ள வேளாண் வளர்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குனர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

## ஆடுகளுக்கு கழிச்சல் நோய்

சிங்கம்புணரி: சிங்கம்புணரி வட்டாரத்தில் ஆடு,கோழிகளை கழிச்சல் நோய் தாக்கியுள்ளது.

அ.காளாப்பூர், மு.சூரக்குடி,பிரான்மலை, சிங்கம்புணரி சுற்று கிராமங்களில் விவசாயிகள் வெள்ளாடு, செம்மண்ட ஆடு வளர்க்கின்றனர். மழை காரணமாக கால் நடைகளுக்கு கழிச்சல் நோய் ஏற்பட்டுள்ளது. ஆடு வளர்ப்பவர்கள் சிங்கம்புணரி கடைகளில் கழிச்சல், காணை நோய்களுக்கு மருந்து வாங்கிச் செல்கின்றனர்.

## மானியத்தில் டிராக்டர் பவர் டில்லர் வழங்கல்

சிவகங்கை: சிவகங்கையில் விவசாயிகள் 14 பேருக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் டிராக்டர், பவர் டில்லர்களை கலெக்டர் மலர்விழி வழங்கினார். மாவட்ட அளவில் விவசாய பணிகளில் ஈடுபடும், விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை மானிய விலையில் வழங்கும் நோக்கில், விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 7 விவசாயிகளுக்கு ரூ.38.03 லட்சம் மதிப்பிலான 7 டிராக்டர்கள், ரூ.8.75 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது. இதில், விவசாயிகள் பங்களிப்பு தொகை ரூ.29.28 லட்சம். அதே போன்று, 7 விவசாயிகளுக்கு ரூ.9.62 லட்சம் மதிப்பிலான பவர்டில்லர் வழங்கப்பட்டது. இதற்கு மானியம் ரூ.4.40 லட்சம். விவசாயிகள் பங்களிப்பு தொகை ரூ.5.22 லட்சம்.

## நிலக்கடலை, எள் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கான நிலக்கடலை மற்றும் எள் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டித்துரை தலைமை வகித்தார். தொழில்நுட்ப மேலாளர் வனஜா வரவேற்றார். நோயியல் துறை பேராசிரியர் விமலா, நிலக் கடலை மற்றும் எள்ளில் ஏற்படும் சாகுபடி முறைகள், விதைநேர்த்தி, பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றியும், விதைசான்று < உதவி இயக்குனர் ராமமூர்த்தி பயிர் எண்ணிக்கை பராமரித்தல், களை நிர்வாகம், உர நிர்வாகம் குறித்த தொழில் நுட்பங்கள் பற்றியும் விளக்கினர். உதவி தொழில் நுட்ப மேலாளர் சுரேஷ்குமார் நன்றி கூறினார்.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## டிச.18 இல் ராமநாதபுரத்தில் அசோலா வளர்ப்பு இலவச பயிற்சி

ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இம்மாதம் 18 ஆம் தேதி அசோலா வளர்ப்பு பற்றிய இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள இந்த நிலையம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு விவரம்: அசோலா என்பது பெரணி வகை நீர்த் தாவரமாகும். இது நெற்பயிருக்கு உகந்த உயிர் உரமாகும். இதை கால்நடைகள், பறவைகள், மீன்களுக்கு உணவாக கொடுக்கலாம். மற்ற தீவனப்பயிர்களை விட

இதில் புரதச்சத்து,அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், மற்றும் தாது உப்புகள் உள்ளன. இத்தகையை அசோலா வளர்ப்பு பற்றிய இலவச பயிற்சி முகாம், வேளாண் அறிவியல் நிலையத்தில் இம்மாதம் 18 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறவுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்வோருக்கு வயது வரம்பு இல்லை. பங்கேற்க விரும்புவோர் திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், ராமநாதபுரம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 04567-230250 அல்லது 232639 என்ற எண்களில் விபரங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை உயர்வு**

பல்லடம் பிராய்லர் கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. இதன்படி, திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.63 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரிப்பால் செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.65 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மண்டபம் பகுதியில் கடல் வளத்தை அதிகரிக்கும் சிங்கி மீன்கள்



மண்டபம் : கடல் வளத்தை அதிகரிக்க உதவி செய்யும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கி குஞ்சுகள் மீன்வளத் துறையினர் ஒத்துழைப்போடு நேற்று மன்னார் வளைகுடா கடலில் விடப்பட்டது. ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை சேர்ந்தவர் கோரிமுகமது. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கடல் வாழ் உயிரினங்களை வளர்த்து வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்து வருகிறார். மேலும் கடந்த மூன்று வருடங்களாக கடல் வாழ் உயிரினங்களை பாதுகாப்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகிறார்.

மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் மீன் மற்றும் நண்டு பண்ணைகள் அமைத்து குஞ்சுகளை பொறிக்க வைத்து கடலில் விட்டு வருகிறார். இந்நிலையில் இவர் வளர்த்து வந்த இறால் வகையை சேர்ந்த சிங்கி மீன் ஒன்று குஞ்சு பொறித்துள்ளது. இவற்றை மண்டபம் தென்கடல் பகுதியான மன்னார் வளைகுடா கடலில் நேற்று விட்டார்.

இதற்கு மீன்வளத்துறையினர் அனுமதி வழங்கியிருந்தனர். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிளி வகையை சேர்ந்த சிங்கி குஞ்சுகள் வளர்ச்சியடைவதற்காக கடலில் விடப்பட்டுள்ளது.

மண்டபம் மீன்வளத்துறை ஆய்வாளர் ரகுமத்துல்லா உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இது குறித்து கோரிமுகமது கூறுகையில், தற்போது ஒன்றரை கிலோ எடையுள்ள தாய் சிங்கிகள் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகிறது. இவ்வகை சிங்கிகள் 10 லட்சத்திற்கும் மேலான குஞ்சுகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறை பொறிக்கிறது. இப்படி பொறிக்கும் குஞ்சுகளை கடலில் விடுவதின் மூலம் கடல் வளம் பெருகும். கடலில் விடப்படும் குஞ்களில் 20 சதவிதம் ஒரு வருட காலத்தில் வளர்ச்சி அடைந்து விடும், என்றார்.

## சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்

துறையூர், : உப்பிலியபுரம் ஒன்றியம் வெங்கடாசலபுரம் கிராமத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து வரும் நாட்களில் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளுக்கு வைரஸ் , பாக்ட்டீரியா மற்றும் குடற்புழுக்களினால் ஏற்படும் பாதிப்புகளை தடுத்திடும் வகையில் கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் சங்கரசுப்பிரமணியன் உத்தரவின் பேரில் உப்பிலியபுரம் ஒன்றியம் வெங்கடாசலபுரம் கிராமத்தி–ல் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமினை ஊராட்சித் தலைவர் பாஸ்கர் தொடங்கி வைத்தார்.

நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை , குடற்புழு நீக்கம் , உண்ணி நீக்கம் , தடுப்பூசி மற்றும் தாது உப்பு கலவை வழங்கல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,135 கால்நடைகள் பயன்பெற்றன. முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் பணி மேற்கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை

உப்பிலியபுரம் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் பெரியசாமி செய்திருந்தார்.

**சாதித்துக் காட்டிய விவசாயிகள் அன்று முட்புதர் மண்டிய காடு இன்று பசுமையாகமாறியஅதிசயம்**

காரைக்குடி, : காரைக்குடி அருகே புதர் மண்டிக்கிடந்த இடத்தை பொதுமக்கள் ஒன்று கூடி சுத்தமாக்கி நெல்பயிரிட்டு சாதனை படைத்துள்ளனர்.காரைக்குடி அருகே கோட்டையூர் வேலங்குடி பகுதியில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அங்குள்ள மக்கள், 20 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வந்தனர். அருகில் உள்ள கண்மாயை நம்பி இந்த விவசாயம் நடந்தது. இந்நிலையில் மழை பெய்யாததால் கண்மாய் வறண்டது. இதனால் 20 ஏக்கர் நிலத்திலும் விவசாயம் கைவிடப்பட்டது. இதனால் நெல் விளைந்த விளைநிலம் பயனற்ற முட்புதர் மண்டி காடு போல் காணப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த விளை நிலங்கள் முட்புதர் மண்டிய காடுகளாவே காட்சியளித்தன.

அப்பகுதியை சேர்ந்த இளைஞர்களும் விவசாயம் பக்கம் திரும்பாமல் வெளிநாட்டிற்கும், வெளி மாநில வேலை மற்றும் சொந்த தொழில் செய்ய துவங்கினர். விவசாயத்திலேயே முழுவதுமாக ஈடுபட்ட பெரியவர்கள், தங்களது செலவுக்கு மகன்களை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. இதற்கிடையே விவசாய துறையினரும் முட்புதர்களை அகற்ற வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் 20 ஏக்கர் நிலத்துக்கு உட்பட்ட 25 பட்டாதாரர்கள் ஒன்றிணைந்து புதர்மண்டிய நிலத்தை மீண்டும் விளைநிலமாக மாற்ற வேண்டும் என முடிவு செய்தனர். இதற்கு இளைஞர்களும் முழு ஆதரவு கரம் நீட்டினர். அதன்பின்னர் ரூ. 3 லட்சம் செலவில் முட்புதர்கள் முழுவதும் அகற்றப்பட்டது. ரூ. 4 லட்சம் செலவில் இரண்டு போர் போட்டு, ரூ. 2 லட்சம் செலவில் கம்பி வேலி நிலத்தை சுற்றி

அடைத்தனர். வயல் முழுவதும் முள் படர்ந்து கிடந்ததால் கால்வைக்க கூட முடியாத அளவில் இருந்துள்ளது. அதை அனைவரும் சேர்ந்து அகற்றி உள்ளனர்.

கடந்த 2014 ல் துவங்கிய இப்பணி 2015ல் முடிவடைந்துள்ளது. நிலத்தில் மண் வளத்தை மீண்டும் கொண்டு வர இயற்கை முறையில் மாட்டு சாணம், விளாரி இலை, தெரணி இலை உள்பட பல்வேறு இலைகளை வயலில் பரப்பில் ஒரு மாதம் அப்படியே மக்க விட்டுள்ளனர். தற்போது வயலை உழுது 10 ஏக்கரில் டீலக்ஸ் ரகம், 10 ஏக்கரில் கல்சர் நெல் பயரிட்டுள்ளனர். முட்புதர் மண்டிய விளை நிலம் தற்போது பச்சை பசேல் என கண்கொள்ளா காட்சியாக உள்ளது. இது குறித்து லட்சுமணன்கூறுகையில்," எங்களது முன்னோர்கள் விவசாய பணியில் ஈடுபட்ட வந்த நிலம் எங்கள் கண்ணுக்கு முன்பே முட்புதர் மண்டி காணப்படுவதை பார்க்கும் போது வேதனையாக இருந்தது. இதனை சரி செய்ய நாட்டர்கள் இணைந்து சரி செய்யும் பணியை நான் உள்பட முன்னாள் எம்எல்ஏ துரைராஜ், சொக்கலிங்கம், சோலைமலை, உமாபதி, மணி என 6 பேரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ரூ. 9 லட்சத்துக்கு மேல் செலவு செய்து நிலத்தை மீட்டுள்ளோம்.

செலவு தொகையை பகிர்ந்து கொண்டோம். விவசாயம் செய்ய வசதியாக 20 ஏக்கரையும் 30 முதல் 40 சென்ட் என பிரித்துள்ளோம். இயற்கை முறையில் விவசாயம் செய்யவுள்ளோம். இதேபோல் அருகே உள்ள 70 ஏக்கர் பரப்பில் முட்புதர் மண்டி உள்ள பெரிய வயலையும் சரி செய்ய முடிவு செய்துள்ளோம். இதற்கு ரூ. 10 லட்சம் செலவாகும் இதற்கு அரசு உதவி செய்ய வேண்டும். இலவச மின்சாரம் வழங்க வேண்டும். உரம், விதை நெல் மானியத்தில் தர வேண்டும். கண்ணுக்கு எட்டிய தூரம் வேலி காடாக இருந்தது, தற்போது பசுமையாக ஒற்றுமையால் சாதித்துள்ளோம்" என்றார்.

**மிளகாயில் இலை சுருட்டலா? தோட்டக்கலைத்துறை அட்வைஸ்**

இளையான்குடி, : மிளகாயில் இலை சுருட்டல், மற்றும் நுனிகருகல் நோயை கட்டுப்படுத்த இளையான்குடி தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. இளையான்குடி வட்டாரத்தில் நடப்பாண்டில் சுமார் 3 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பளவில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் விதைக்கப்பட்ட மிளகாய் விதைகள் பூக்கும் நிலையில் வளர்ந்துள்ளது. தற்போது நிலவி வரும் தொடர் பனி, மழைக்கு வேர் அழுகல் நோய், நுனி கருகல் நோய், இலை சுருட்டல் நோய் பரவ வாய்ப்புள்ளது. நுனி கருகல் நோய் தாக்கிய செடியின் நுனி இலைகள் கருகிவிடும்.

இந்த நோய் தீவிரமாகும்போது நுனியிலிருந்து கீழ்நோக்கி பரவி, பூக்களும் உதிர்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த நிலத்தில் தண்ணீர் தேங்க விடக்கூடாது. மேலும் 1 லிட்டர் தண்ணீரில், 2.5 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு (அல்லது) மேன்கோசைப் கரைத்து தெளிக்க வேண்டும். இலை சுருட்டல் நோய், இலையின் நடு நரம்பில் சுருண்டு உருமாற ஆரம்பிக்கும். மேலும் குட்டை வளர்ச்சி, இடைகணுக்கள், சிறிய இலையாக காட்சியளிக்கும். பூ மொட்டுக்கள் பெரிய அளவை அடையும் முன் உதிர்ந்து விடும். முக்கியமாக வெள்ளை ஈ மூலம் பரவுவதால், 1 லிட்டர் தண்ணீரில் 2மி.லி டைமீத்தோயேட் (அல்லது) 2மி.லி அசிப்பேட் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் நோய் தாக்கப்பட்ட நச்சுயிரி செடிகளை வேருடன் களைந்து துரத்தில் புதைக்க அல்லது எரிக்க வேண்டும். இவ்வாறு தகுந்த ஆலோசனைகளை கடைபிடித்தால் மிளகாயில் அதிக மகசூலைப் பெறலாம் என இளையான்குடி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர் ரவிசங்கர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

**சின்ன வெங்காயத்தை சீரழிக்கும் சாறு உறிஞ்சும் பூச்சி**

சிவகங்கை, : சின்ன வெங்காய பயிரை தாக்கி சாறு உறிஞ்சும் பூச்சியை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. சின்ன வெங்காய பயிரை சாறு உறிஞ்சும் பூச்சி தாக்குவதால் அதிகளவில் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. சின்ன வெங்காயத்தில் இலை, நுனி கருகல், இலைப்பேன் போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளால் கருகல் நோய் ஏற்படும். இந்த நோய் பூசாணத்தினால் ஏற்படுகிறது. நுனி கருகிய வெங்காயத்தின் அடிப்பாகத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் இருந்தால் அதை கட்டுப்படுத்த பயிருக்கு அதிகளவில் சாம்பல் சத்து இட வேண்டும்.

வேப்பம் புண்ணாக்கு ஒரு எக்டேருக்கு 60 கிலோ என்ற அளவில் நடவு செய்யும்போது இட வேண்டும். அதிக வறட்சி மற்றும் அதிக வெப்பநிலை இருக்கும் பகுதியில் இலைப்பேன் தாக்குதல் காணப்படும். இந்த சூழலை தவிர்க்க அதிக முறை நீர் பாய்ச்சி பயிர் காயாமல் பார்த்து கொள்ள வேண்டும். இலைப்பேன் இல்லாமல் கருகல் பாதிப்பு மட்டும் இருந்து அடித்தண்டில் அழுகல் காணப்பட்டால் பூஞ்சான கொல்லி தெளிக்க வேண்டும். ஒரு சதம் போர்ட்டோ கலவை அல்லது 0.2 சதவீதம் தாமிர பூஞ்சாண கொல்லி பயன்படுத்தலாம்.

பூஞ்சானை கொல்லிகளுடன் ஒட்டும் திரவம் ஒரு லிட்டர் நீருக்கு 0.5 மில்லி என்ற அளவில் கலந்து 2 அல்லது 3 முறை தெளிக்க வேண்டும். நுனிக்கருகல் நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் மான்கோசெப் இரண்டு கிராம் கலந்து 0.5 மில்லி ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். அழுகல் நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் கார்பெண்டாசிம் ஒரு கிராம் வீதம் கலந்து கரைசலை வேர் பகுதி நனையுமாறு மண்ணில் ஊற்ற வேண்டும் என மாவட்ட வேளாண்துறை தெரிவித்துள்ளது.

## 16 ஆண்டுகளுக்குப் பிறகு கார்வழி தடுப்பணை நிரம்புகிறது விவசாயிகள் மகிழ்ச்சி

க.பரமத்தி, : 16ஆண்டுகளுக்கு பின்னர் கார்வழி அணை நிரம்பி வருவதையடுத்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திருப்பூர் மாவட்டத்திலிருந்து நொய்யல் ஆறு துவங்குகிறது. சின்னமுத்தூர் என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் தடுப்பணை உள்ளது. இப்பகுதியில் இருந்து அஞ்சூர் ஊராட்சி கொளந்தாபாளையம் என்ற இடத்தில் கரூர் மாவட்ட எல்லையை நொய்யல் ஆறு தொடுகிறது. அங்கிருந்து அஞ்சூர், கார்வழி, துக்காச்சி, முன்னூர், அத்திபாளையம், கரூர் ஒன்றியத்தில் சென்று காவிரியில் கலக்கிறது. இந்த நொய்யல் ஆற்று பாசனத்தை நம்பி சூரியகாந்தி, பருத்தி, நெல், மக்காச்சோளம், கம்பு போன்ற பணப்பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர்.

இந்நிலையில் க.பரமத்தி ஒன்றியம் கார்வழி ஊராட்சியில் ஆத்துப்பாளையம் அணையில் நொய்யல் நீர் தேக்கம் 1980ம் ஆண்டில் 163 எக்டேரில் கட்டுமான பணிகள் தொடங்கி 1990ம் ஆண்டு அணை கட்டி முடிக்கப்பட்டது. இந்த அணை மூலம் நொய்யல் ஆற்றில் மழை வெள்ள காலங்களில் வரும் உபரி நீரையும், கீழ் பவானி வாய்க்காலில் வரும் கசிவு நீரையும் கார்வழி ஊராட்சியில் நொய்யல் நீர் தேக்க அணையில் தேக்கி வைத்து வாய்க்கால்கள் மூலம் அஞ்சூர், கார்வழி, துக்காச்சி, தென்னிலை கிழக்கு, முன்னூர், அத்திபாளையம், குப்பம், புன்னம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் கரூர் ஒன்றியத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் சுமார் 19,000 ஏக்கருக்கு மேல் விளைநிலம் பாசன வசதி பெற்று வந்தன. அணை கட்டி முடிக்கப்பட்டு 5 ஆண்டுகள் மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் கிடைத்தது. அதன்பிறகு திருப்பூர் சாயப்பட்டறை கழிவு நீர் கலந்து வந்ததால் விவசாய கிணறுகள் நீர் மாசடைந்தது.

இதனால் பயிர்கள் போதிய வளர்ச்சி இல்லாத நிலை ஏற்பட்டது.மேலும் பொதுமக்களுக்கும் உடல் தொந்தரவுகள் மற்றும் கால்நடைகளுக்கு

வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொந்தரவுகள் ஏற்பட்டது. பின்னர் ஐகோர்ட் உத்தரவுப்படி அணை 1999ம் ஆண்டு அணை மூடப்பட்டது. இதற்கு நஷ்ட ஈடு கேட்டு விவசாயிகள் மற்றும் பல விவசாய சங்கங்கள் வழக்கு தொடர்ந்து போராடி வருகின்றனர். தற்போது மழை வெள்ள காலங்களில் நொய்யல் ஆற்றில் மட்டுமே தண்ணீர் செல்கிறது. இதையடுத்து கீழ் பவானி எல்.பி.பி. வாய்க்கால் கசிவு நீர் மற்றும் மலையத்தாபாளையம் ஓடை தண்ணீரை தடுத்து முத்தூர் அருகே தொட்டிபாளையத்தில் தடுப்பணை கட்டப்பட்டது. அந்த நீரை ஆத்துப்பாளையம் அணைக்கே கொண்டு வர வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதை ஏற்று நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பெய்த மழையால் கீழ் பவானி எல்.பி.பி. வாய்க்கால் கசிவு நீர் மற்றும் ஓடை தண்ணீர் கார்வழி அணைக்கு வந்து அணை சுமார் 20அடியை எட்டியுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் அணை முழுவதும் நிறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து விவசாயிகள் கூறுகையில்: 1999ஆண்டுக்கு பிறகு தற்போது அணை 20அடியை தொட்டுள்ளது. இன்னும் 6அடி மட்டுமே நிரம்ப வேண்டும்.இதனால் கடந்த 16ஆண்டுகளாக விவசாயமின்றி கிடந்த நிலங்கள் பாசன வசதியை பெறமுடியும் என்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## ஒரு மரத்தில் ஆண்டுக்கு 200 காய்கள் தென்னையில் அதிக மகசூல் பெற இடவேண்டிய உரங்கள் அளவு

சேதுபாவாசத்திரம், : தென்னை மரங்களுக்கு இட வேண்டிய உர அளவுகள் குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்க்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்னையில் நாட்டு ரக (நெட்டை ரகம்) தென்னைகளுக்கு நடவு செய்தது முதல் ஒரு வருடத்திற்கு தொழுஉரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 500 கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500 கிலோ இட வேண்டும். 2 வருட கன்றுக்கு தொழுஉரம் 20 கிலோ, யூரியா 650கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500கிலோவும் என வேளாண்துறை பரிந்துரைப்படி 5 வருடங்கள் வரை உரமிட வேண்டும். வீரிய ஒட்டு (நெட்டை மற்றும் குட்டை ) ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 500 கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500 கிலோவும், இரண்டு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 30கிலோ, யூரியா 1கிலோ, சூப்பர் 750கிராம், பொட்டாஷ் 1.500கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500கிலோவும் என மூன்று வருட, நான்கு வருட, ஐந்து வருட கன்றுகளுக்கு வேளாண்துறை பரிந்துரைப்படி உரம் இட வேண்டும்.

மேற்கண்ட உர பரிந்துரை அளவினை சம பங்காக பிரித்து வருடத்தில் இரு முறை இட வேண்டும். அதாவது மார்கழி, தை மாதங்களில் ஒரு முறையும், ஆனி, ஆடி மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். மேற்கண்ட உரங்களை இட்ட 30 முதல் 45 நாட்கள் கழித்து தென்னை நுண் சத்து உரத்தை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இட வேண்டும். இவ்வகை உரங்களை மரத்தை சுற்றி 5 அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறிவிட்டு உடனடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். முறையாக உரமிடும் பட்சத்தில் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீள வடிவிலான வெற்றுகாய்கள் ஆகிய பிரச்சனைகள் குறைந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை கண்டிப்பாக மகசூல் எடுக்க முடியும்.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## 75 சதவீத மானிய விலையில் தீவன விற்பனை தொடக்கம்

காரைக்கால்,: காரைக்காலை அடுத்த திருநள்ளாறு நளநாராயாணப்பெருமாள் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, புதுச்சேரி உயர்கல்வி அமைச்சர் சிவா தலைமை வகித்தார். திருநள்ளாறு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர் தாமரைச்செல்வன், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய மேலாண் இயக்குனர் குமாரசாமி, மாவட்ட வட்டார வளர்ச்சி அலுவலக அதிகாரி ரேவதி கலந்து கொண்டனர்.

இதில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு, 75% மானிய விலையிலான தீவனத்தை, அமைச்சர் சிவா வழங்கி துவங்கி வைத்தார். மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், தொகுதி மக்களுக்கு இலவச கழிவறைகள் கட்ட சுமார் 100 குடும்பங்களுக்கு தலா ரூ.7 ஆயிரத்திற்கான பணி ஆணையை யும் அமைச்சர் வழங்கினார். நிகழ்ச்சியில், என்.ஆர் காங்கிரஸ் பிரமுகர்கள் சிவகுமார், மகாலிங்கம், அய்யாடி, திருநள்ளாறு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க எழுத்தர் பாண்டியன், இயக்குனர்கள் ரவிச்சந்திரன், விஷ்ணுவரதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நாகை, : தேசிய வேளாண். பயிர் காப்பீடு நிறுவனத்தின் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் நடைமுறை படுத்தப்படும் சம்பா மற்றும் தாளடி நெற்பயிருக்கு 2015- 16ம் ஆண்டுக்கான பயிர் காப்பீடு பிரிமியத்தொகையாக ஏக்கருக்கு சிறு குறு விவசாயிகள் ரூ.134, இதர விவசாயிகள் ரூ.149 பிரிமிய தொகையாக செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

பயிர் கடன் பெறாத விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமிய தொகை செலுத்த இன்று (15ம் தேதி) கடைசி நாளாகும். பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமிய தொகை செலுத்த வருகிற 31ம் தேதி கடைசி நாளாகும். எனவே விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்வது தொடர்பாக உரிய ஆவணங்களை

கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்ககளில் தவறாமல் பயிர் காப்பீடு செய்து இயற்கை சீற்றங்களால் பயிருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

**பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய இன்று கடைசி**

நாகை, : தேசிய வேளாண். பயிர் காப்பீடு நிறுவனத்தின் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் நடைமுறை படுத்தப்படும் சம்பா மற்றும் தாளடி நெற்பயிருக்கு 2015- 16ம் ஆண்டுக்கான பயிர் காப்பீடு பிரிமியத்தொகையாக ஏக்கருக்கு சிறு குறு விவசாயிகள் ரூ.134, இதர விவசாயிகள் ரூ.149 பிரிமிய தொகையாக செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும். பயிர் கடன் பெறாத விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமிய தொகை செலுத்த இன்று (15ம் தேதி) கடைசி நாளாகும்.

பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமிய தொகை செலுத்த வருகிற 31ம் தேதி கடைசி நாளாகும். எனவே விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்வது தொடர்பாக உரிய ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்ககளில் தவறாமல் பயிர் காப்பீடு செய்து இயற்கை சீற்றங்களால் பயிருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## அரசுத் தோட்டக்கலை பண்ணையில் 3 லட்சம் மிளகாய் கன்றுகள் விற்பனைக்கு தயார்



விருத்தாசலம்

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 3 லட்சம் மிளகாய் கன்றுகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது.

வினியோகம்

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் முந்தரி, மா, பலா, கொய்யா, மிளகாய், பப்பாளி உள்ளிட்ட தோட்டக்கலைத்துறை பயிர்களின் கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு அரசு அறிவிக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. கடலூர்

மாவட்டம் மட்டும் இன்றி அரியலூர், நாகப்பட்டினம், வேதாரண்யம் உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்கும் இந்த பண்ணையில் இருந்து கன்றுகள் ஏற்றுமதி செய்யப்பட்டு விவசாயி களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

3 லட்சம் கன்றுகள்

தற்போது கார்த்திகை, மார்கழி, தை பட்டங்களுக்கான நாம்தாரி 230 என்ற வீரிய ரக மிளகாய் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது 3 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. இதுகுறித்து பண்ணை மேலாளர் கலைச்செல்வன் கூறும் போது இந்த நிதியாண்டிற்கு 8 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஒன்றை லட்சம் கன்றுகள் வினியோகிக்கப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலைத்துறையின் கீழ் கன்றுகள் வாங்கும் விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள மான்யம் கிடைக்கும். இந்த மிளகாய் ரகத்தை சொட்டுநீர் பாசன முறையில் நீர் வழி உரத்துடன் பராமறித்தால் ஏக்கருக்கு 15 டன் வரை மகசூல் கிடைக்கும். விருப்பமுள்ள விவசாயிகள் உரிய ஆவனங்களுடன் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையை அனுலாம். எனத்தெரிவித்தார்.

## கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்தில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி 22-ந்தேதி நடக்கிறது

பெரம்பலூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவரும், இணை பேராசிரியருமான பாலசுப்பிரமணியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- பெரம்பலூர் மாவட்ட கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் விஞ்ஞான முறையில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் வருகிற 22-ந் தேதி (செவ்வாய்க்கிழமை) நடைபெற உள்ளது. இதில் விஞ்ஞான

முறையில் வெள்ளாடு வளர்ப்பு, உயர்ரக இனங்கள் மற்றும் இனப்பெருக்க மேலாண்மை, வெள்ளாடுகளுக்கு தீவன மேலாண்மை, ஆட்டுக்கொட்டகை அமைக்கும் முறை பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த பயிற்சியில் சேர விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணிக்கு மேல் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு நேரில் வந்து பெயர் பதிவு செய்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மேலும் விபரங்கள் அறிந்து கொள்ள 04328 291459 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

## விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் கார்த்திக்தொண்டைமான் எம்.எல்.ஏ. வழங்கினார்



புதுக்கோட்டை மாவட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வழங்கும் விழா புதுக்கோட்டை கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதற்கு கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கினார். இதில் கார்த்திக்தொண்டைமான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திருவரங்குளம், குன்றாண்டார்கோவில், அன்னவாசல் வட்டாரத்தை சேர்ந்த 20 விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகள் (பவர் டில்லர்) வழங்கினார். இதில் வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் நாகேந்திரன், திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் நெப்போலியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விளைச்சல் குறைவால் மிளகாய் விலை உயர்வு**



கண்டமனூர், விளைச்சல் குறைந்ததன் காரணமாக மிளகாய் விலை உயர்ந்துள்ளது. இதன்படி ஆண்டிப்பட்டி பகுதியில் ஒரு கிலோ மிளகாய் ரூ.50–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

விளைச்சல் குறைந்தது

தமிழகத்தில் வசிக்கும் மக்கள் உணவு பொருட்களை தயாரிப்பதற்கு வெங்காயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் உபயோகப்படுத்துவது மிளகாயைத்தான். பொதுவாக ஒரு காலத்தில் கிராமங்களில் பழைய சோறும், பச்சை மிளகாயும் இருந்தால் போதும் என்ற வழக்குச்சொல் பயன்பாட்டில் இருந்தது. தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியில் ஒரு காலத்தில் மிளகாய் அதிக அளவில் பயிரிடப்பட்டது. இதற்கிடையே பருவநிலை மாற்றம் காரணமாக விவசாயிகள் பலரும் மிளகாய் பயிரிடுவதை கைவிட்டனர். கடந்த மாதம் பெய்த தொடர்மழை காரணமாக கதிர்நரசிங்காபுரம், சித்தார்பட்டி, தெப்பம்பட்டி, ராஜதரணி, பாலக்கோம்பை, வண்டியூர், மஞ்சிநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஏக்கர் நிலங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு மிளகாய் பயிரிட்டனர். ஆனால் மிளகாய் செடிகளில் அழுகல் நோய் ஏற்பட்டதால் விளைச்சல் குறைந்தது. இதற்கிடையே இப்பகுதி விவசாயிகள் ஒட்டு ரகங்களை சேர்ந்த மிளகாய்களை பயிரிட்டு இருந்தனர்.

கூடுதல் விலை

இதனால் அவற்றை பாதுகாக்கும் முறைகள் குறித்து தெரியாமல் போனது. தற்போது மிளகாய்க்கு சந்தையில் கூடுதல் விலை கிடைத்து வருகிறது. அதன்படி ஆண்டிப்பட்டியில் ஒரு கிலோ மிளகாய் ரூ.50–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதையடுத்து தங்கள் நிலத்தில் விளைந்த மிளகாய்களை பறித்து அவற்றை தரம் பிரித்து சந்தைக்கு அனுப்பும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். ஆனால் அதிக விலை கிடைக்கும் நேரத்தில் விளைச்சல் குறைந்து போனதால் அப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே வேளாண்மைத்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஒட்டு ரகங்களை சேர்ந்த பயிர்களை

நோய்களில் இருந்து காப்பாற்றும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

**திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் தக்காளி விலை கிடுகிடு உயர்வு**



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு திருப்பூர், பல்லடம், காங்கயம், தாராபுரம், பொங்கலூர் சுற்று வட்டார கிராமங்களில் இருந்து தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம் பெய்த தொடர்மழையால் தக்காளி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் தக்காளி வரத்து குறைந்து ஒரு கிலோ தக்காளி ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் மைசூர், ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும், கிருஷ்ணகிரி, ஓசூர் ஊர்களில் இருந்தும் தக்காளி விற்பனைக்கு வந்தது. இதனால் தக்காளி விலை ஒருகிலோ ரூ.20 ஆக குறைந்தது. ஆனால் கடந்த 2 நாட்களாக உள்ளூர் தக்காளி மற்றும் வெளியூர் தக்காளி வரத்து குறைந்து விட்டதால் தக்காளி விலை கிடுகிடு என உயர்ந்து விட்டது. எனவே நேற்று திருப்பூர்

தென்னம்பாளையம் மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.35–க்கு விற்கப்பட்டது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## குமரியில் மழை நீடிப்பு: பேச்சிப்பாறை அணையில் இருந்து 250 கனஅடி தண்ணீர் திறப்பு

நாகர்கோவில், டிச. 16– குமரி மாவட்டத்தில் கொட்டி தீர்த்த கனமழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு, மாம்பழத்துறையாறு, முக்கடல் அணைகள் நிரம்பி வழிந்தது. இதையடுத்து அணைகளில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டது. அணைகளை கண்காணித்து நீர்வரத்திற்கேற்ப தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. மழை சற்று ஓய்ந்திருந்த நிலையில் அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து குறைந்தது.

இதனால் அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீர் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் நேற்று மாலை பேச்சிப்பாறை அணை பகுதியில் சுமார் 2 மணி நேரம் கனமழை கொட்டி தீர்த்தது. இடி–மின்னலுடன் பெய்த கனமழையினால் அந்த பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பெருஞ்சாணி, சிற்றாறு, ஆணைக்கிடங்கு, குருந்தன் கோடு, மார்த்தாண்டம், சுருளோடு, கோழிப்போர் விளை, பாலமோர் பகுதிகளிலும் பலத்த மழை கொட்டியது. பேச்சிப்பாறையில் அதிகபட்சமாக 30.6 மி.மீ. மழை பதிவானது. இதையடுத்து அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை

அணையில் இருந்து இன்று காலை பாசனத்திற்காக 250 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் இன்று காலை 46.05 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 421 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 77 அடி கொள்ளளவு கொண்ட பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 75.21 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 337 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 244 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. சிற்றாறு–1 அணையின் நீர்மட்டம் 16.76 அடியாகவும், சிற்றாறு–2 அணையின் நீர்மட்டம் 16.86 அடியாகவும், பொய்கை அணையின் நீர் மட்டம் 25.60 அடியாகவும் உள்ளது. திற்பரப்பு அருவி பகுதியில் நேற்று மாலை சாரல் மழை பெய்தது. அருவியில் மிதமான அளவு தண்ணீர் கொட்டி வருகிறது. சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியலிட்டு வருகிறார்கள்.

மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மி.மீ. வருமாறு:–

பேச்சிப்பாறை–30.6, பெருஞ்சாணி–10.2, சிற்றாறு–1–21.8, சிற்றாறு–2–10.8, ஆணைக்கிடங்கு–3, குருந்தன்கோடு–19.4, அடையா மடை–24, கோழிப் போர்விளை–7.2, முள்ளங் கினாவிளை–4, புத்தன் அணை–9.6, பூதப்பாண்டி– 8.4, சுருளோடு–12, கன்னி மார்–3, பாலமோர்–11.6.